**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 61/2019

**வா.சா.1**

**திருமதி. சுசித்ரா சுமந்த்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு தொடர் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( பிரதிவாதிகள் தரப்பில்)**

என் அண்ணன் 2021 ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் அண்ணன் காலமான பின்னிட்டு அவரது மனைவி லதா 07-06-2021 தேதியில் ரூ.35,000/-மும், 29-11-2021 தேதியில் ரூ.35,000/-மும் குத்தகை தொகையை எனது வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் ஆமாம். பின்னிட்டு 17-05-2022 தேதியில் ரூ.67,000/-மும், 03-11-2022 ல் ரூ.8,000/-மும் லாதாவின் வங்கி கணக்கிலிருந்து எனது வங்கி கணக்கிற்கு குத்தகை பணம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் எனது வங்கி கணக்கை பார்த்தால் தான் என்னால் சொல்ல இயலும். 22-08-2024 தேதியில் ரூ.54,000/-ம் குத்தகை பணம் அவரது வங்கி மூலமாக எனது வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் என் வங்கி கணக்கை பார்த்தால் தான் என்னால் சொல்ல இயலும். 21-12-2024 தேதியில் ரூ.52,500/- குத்தகை பணம் என் வங்கி கணக்கிற்கு அவர் செலுத்தியுள்ளார் என்றால் என் வங்கி கணக்கை பார்த்தால் தான் என்னால் சொல்ல இயலும். மேற்படி தொகைகள் அனைத்தும் லதா தனது

வங்கி மூலமாக என் வங்கிக்கு அனுப்பியுள்ளாரா இல்லையா என்பதை நான் எனது வங்கி கணக்கு விபரங்களை பார்த்து சொல்ல தயாராக உள்ளேனா என்றால் ஆமாம். 2024 ம் வருடம் 12 ம் மாதம் முடிய என் அண்ணி குத்தகை தொகையை எனக்கு செலுத்தியுள்ளார் அதனால் தான் பாகக்கறார் பொய் என்று சொல்ல தடுக்கப்படுகிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே பிரதிவாதிகளுக்கு என்னை ஏமாற்றும்படியான எண்ணம் இருந்திருந்தால் அவரிடம் என்னுடைய பூமியை குத்தகைக்கு ஒப்படைத்து ஓட்ட சொல்லியிருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. தற்போது சொத்தை மகேந்திரன் வக்கீல் ஓட்டிவருகிறாரா என்றால் பார்த்து வருகிறார். தற்போது எவ்வளவு குத்தகை தொகை அவர் செலுத்திவருகிறார் என்றால் என் அண்ணி எவ்வளவு குத்தகை தொகை செலுத்தி வந்தாரோ அந்த தொகையை தான் செலுத்திவருகிறார். சாட்சி தற்போது குத்தகை தொகையாக நேரடியாக அவர்கள் செலுத்தவதில்லை நிலத்தில் விளையும் மகசூல்கள் அனைத்தும் சொசைட்டிக்கு அவர்கள் கொடுத்துவிடுவார்கள் அந்த மகசூலின் விலையை சொசைட்டி முழுவதுமாக எங்களுக்கு கொடுத்துவிடும் அந்த தொகையில் குத்தகை தொகையை கழித்துகொண்டு மீதி தொகை அனைத்தையும் வக்கீல் மகேந்திரன் மூலமாக குத்தகைக்கு ஓட்டி வரும் நபருக்கு அனுப்பப்படும். தற்போது பூமியை யார் ஓட்டிவருகிறார்கள் என்று எனக்கு நேரடியாகத்தெரியாது மகேந்திரன் வக்கீல் மூலமாகத்தான் ஓட்டி வருகிறார்கள். மகேந்திரன் வழக்கறிஞர் கணக்கிலிருந்து குத்தகை தொகை எனக்கு வந்துசேர்கிறது என்றால் இல்லை சொசைட்டி தான் எங்களுக்கு கொடுக்கிறார்கள். சொசைட்டி தான் எங்களுக்கு தொகை செலுத்துகிறது என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்ய தயாராக

உள்ளேனா என்றால் சிலிப் இருக்கும் அது இருந்தால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வா.சா.ஆ.1 தேதியில்தான் பாகப்பிரிவினை நடந்ததாக ஒத்துக்கொள்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் பதிவு எண் 1320/2006. ஆவண எண்.1319/2006 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பாரா 17 ல் எனது தாயார் பிரதிவாதிக்கு ஆதரவாக தானசெட்டில்மெண்ட் ஆவணம் எண்.1319/2006 எழுதி கொடுத்துள்ளதில் நான் சாட்சியாக இருந்துள்ளேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதை தெரிந்துகொண்டேனா என்றால் தற்போது தான் தெரிந்துகொண்டேன். வா.சா.ஆ.1 தேதி முதல் வழக்கு தாக்கல் செய்யும் நாள்வரை வழக்கு சொத்தை பொறுத்து என்னென்ன ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்னென்ன பரிமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தை அறிய வில்லங்க சான்றை பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 தேதிக்கு பின்னிட்டு எனது அண்ணன் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை பொறுத்து அவர் குடும்பத்தாருக்குள் 12-03-2019 தேதியில் ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டு அதன் அடிப்படையில் சொத்துக்களை அவரவர்கள் தனித்தனியாக அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள சொத்து எனக்கு 2006 பாகப்பிரிவினைக்கு முன்பே கொடுக்கப்பட்டதா அல்லது அதற்கு பின்னிட்டு கொடுக்கப்பட்டதா என்றால் 2006 ம் ஆண்டிற்கு பின்னிட்டு தான் கொடுக்கப்பட்டது. மேற்படி சொத்தை நான் ஈரோட்டினை சேர்ந்த 3 ம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

மேற்படி சொத்தை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்தது குறித்து என் அண்ணன் அவர் உயிருடன் இருக்கும் காலம் வரை அதை ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான் மேற்படி சொத்து 3 நபர்களுக்கு தனித்தனியாக பிரித்துக் கொடுக்கப்பட்டது எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் விற்பனை செய்தேன். அவ்வாறு யார் யார் 3 நபர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கும், என் தாயாருக்கும், என் சகோதரருக்கும் ஒதுக்கப்பட்டது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட காலக்கட்டத்திலும் 2006ம் வருடத்திய பாகப்பிரிவினை பத்திரமானது என்னை ஏமாற்றி ஏற்படுத்தப்பட்டது என்று நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் மேற்படி ஈரோடு சொத்தானது கம்பெனிக்கு சொந்தமான சொத்து ஆனால் தாவா சொத்து அடமானம் வைக்கவேண்டும் என்று கூறித்தான் கையெழுத்து பெற்றனர். அதனால் நான் ஆட்சேபிக்கிறேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் தரப்பினராக இருக்கும் நிலையில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து முழுவதுக்கும் மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருக்கவேண்டும் என்றும், அவ்வாறு செலுத்தாமல் வா.சா.ஆ.1 ஆவணம் முழுவதும் செல்லாது என்று கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ள எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் 52 சென்ட் நிலத்தை தமிழ்நாடு நெடுஞ்சாலை துறைக்கு நான் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் மேற்படி சொத்தானது என் பாட்டி மூலமாக எனக்கு தானமாக கிடைத்த சொத்து. மேற்படி சொத்தின் சர்வே எண். 194/1 மற்றும் 194/2 என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தின் நான்கெல்லைகளில்

என் அண்ணன் சோமசேகரின் பூமிக்கு தென்புறமாக உள்ளதாக காண்பித்துள்ளேன் என்றால் திசைகள் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சர்வே எண். 194/2 க்கு புதிய க.ச.எண்கள்.192, 193, நெ காலைகளுக்கு 3ம் லக்கமிட்டவர் பூமியில் பூமி வழியாக பொதுவில் ஒரு வண்டித்தடம் அமைத்து மேற்படி தடத்தின் வழியாக 2, 3 லக்கமிட்டவர்கள் பங்கு பூமிகளுக்கு சகல லாரி, வண்டி, ரிக் போன்ற வாகனங்கள் ஓட்டி சென்று திருப்பிக்கொண்டுவர உள்ள வண்டி தட பாத்தியம் உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்தையே நான் எதிர்ப்பதால் அதை பற்றி என்னால் ஒத்துக்கொள்ள இயலாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் பெரியம்மா சாட்சியாக இருந்துள்ளார் என்றால் 2006 ம் ஆண்டு ஏற்பட்ட ஆவண சமயத்தில் என் பெரியம்மா வந்து கையெழுத்து போட்டார் அவர் தற்போது உயிரோடு இல்லை. ஆவண எண். 1319/2006 மற்றும் 1320/2006 ஆவணங்கள் தயாரித்த ஆவண எழுத்தர் ஒருவர்தான் என்றால் என் தாயார் எழுதிவைத்த ஆவணத்தை தயாரித்த ஆவண எழுத்தர் மட்டும் தான் எனக்கு தெரியும். கே.எஸ்.பழனிச்சாமி என்ற ஆவண எழுத்தர் தான் நான் சாட்சி கையெழுத்திட்ட ஆவணத்தையும் தயாரித்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எத்தனை ஏக்கர் சொத்து பாகக்கறார் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தோட்ட பூமி 18 ஏக்கர், மற்ற பூமிகள் 16 முதல் 18 இருக்கலாம் கோபியில் உள்ள கட்டிடங்கள், பேக்டரி சொத்துக்கள், மற்றும் வீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்கள் சுமாராக 5 கோடி முதல் 10 கோடி வரை மதிப்பு இருக்கும் என்றால் அதற்கும் அதிகமாக இருக்கலாம். மேற்படி சொத்துக்களின் வருவாய் ஆவணங்கள், உள்ளாட்சி துறை ஆவணங்கள் என் அண்ணன் பெயருக்கு மாற்றப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே சொத்துக்கள் யார் யார் பெயரில் பெயர் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிந்திருந்தால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. என் அண்ணனின் பெண்மக்கள் தற்போது சொத்துக்களை எவ்வாறு அனுபவித்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் நெடுஞ்சாலை துறை ரோடு அமைந்திருப்பதால் அரசை ஒரு தரப்பினராக நான் சேர்த்திருக்கவேண்டும் என்றும், அவ்வாறு சேர்க்காமல் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்ததக்கததல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனார் 2000 ம் ஆண்டு காலமாகிவிட்டார் இந்த வழக்கு 2019 ல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்பதாலும், 2006 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டுள்ள 13 ஆண்டுகள் கழித்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், அசல் வழக்கானது காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு 150 பவுன் நகை, ஈரோட்டில் உள்ள சொத்து, கோபியில் உள்ள வயல் கொடுக்கப்பட்டுள்ளது மேற்படி சொத்துக்களின் மதிப்பு என் அண்ணனுக்கு கொடுத்த சொத்தின் மதிப்பை விட அதிகமானது என்றால் சரியல்ல. ஈரோட்டில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தானது என் அண்ணன் தான் எனக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. ஈரோட்டில் உள்ள சொத்தை 3 ம் நபர்களுக்கு விற்பனை செய்த சொத்து ஆவணத்தையும், நெடுஞ்சாலை துறைக்கு நான் விற்பனை செய்த சொத்தின் ஆவணத்தையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேனா என்றால் ஆமாம். அதேபோல் என் அண்ணி என் வங்கி கணக்கிற்கு எவ்வளவு தொகை அனுப்பியுள்ளார் என்ற விபரத்தையும் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால்

ஆமாம். சொத்துக்கள் அனைத்தையும் பெற்ற பின்னிட்டும், என் சகோதரிடமிருந்து சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 தேதியிலேயே என் அண்ணனுக்கு என் தாயார் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் நானும், என் பெரியம்மாவும் சாட்சிகளாக இருந்து கையெழுத்துபோட்டுவிட்டு அதே தேதியில் பாகப்பிரிவினை பத்திரத்திலும் கையெழுத்து போட்டுவிட்டு வேண்டுமென்றே பாகப்பிரிவினை பத்திரத்தை மறுத்து வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் உண்மை என்பதால் தான் மேற்படி ஆவணம் எழுதிய பின்னிட்டு 5 ஆண்டுகள் என் அண்ணியிடமிருந்து நான் குத்தகை தொகை பெற்றுவந்தேன் என்றால் சரியல்ல. என் அண்ணனுக்கு பிரிந்த சொத்துக்கள் எங்குள்ளது, என்ன விவசாயம் செய்யப்பட்டு வருகிறது என்பதே தெரியாமல் பொய்யாக நான் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றும், சொத்தை பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் என் அண்ணன் பெயருக்கும், அதன் பின்னிட்டு அவரது மக்கள் பெயரிலும் பெயர் மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்றே தெரிந்தும் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.